<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.583/2020 பெயர்- சம்பத் நாள்.11.10.2023

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 14 ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, வழக்கறிஞர் கொடுத்தார், நான் பார்க்கவில்லை. கடன் வாங்கியதாக சொல்லப்படும் மோகன்ராஜ், கடன் வாங்கியதற்கு அடுத்த வருடமே இறந்துவிட்டார். 4 மாத அளவிலேயே இறந்துவிட்டார். மோகன்ராஜின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. இறந்த மோகன்ராஜுக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் உள்ளது. எனக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் உள்ளது. பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் உள்ள வீடு என் சொந்த வீடுதான். எங்கள் வீட்டில் நான், என் மனைவி மற்றும் மகன் மூன்று பேர் மட்டும்தான் உள்ளோம். எங்களுடைய வீட்டின் மாத குடும்ப செலவு எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குடும்ப செலவிற்கு நான் பணம் கொடுப்பதில்லை, என் மகன்தான் கொடுத்து வருகிறார். எனக்கு எந்தவித வருமானமும் இல்லை என்றாலும், தாவாவில் குறிப்பிட்டுள்ளதுபோல் ரூ.4,00,000/- நான் கடன் கொடுக்ககூடிய அளவிற்கு வசதி இல்லை என்றாலும், அவ்வாறு கடன் கொடுத்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல, காடு உள்ளது, விவசாய வருமானம் உள்ளது. இந்த வழக்கு தாக்கல்

செய்யப்பட்ட சமயத்தில் அசல் மற்றும் வட்டி தொகை எவ்வளவிற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ரூ.4,43,000/- தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எவ்வளவு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டது என்றால் நினைவில் இல்லை. நான் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் வழக்குடன் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாண்டு அசல் மட்டும் தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஜப்தி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் நினைவில் இல்லை. மேற்படி மனு சொத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், இந்த வழக்கு குறித்து எந்த சங்கதியும் தெரியாது என்றாலும், பழனிச்சாமி என்பவரின் பினாமி நான் என்றாலும் சரியல்ல. ஜப்தி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து எதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டது என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் சீட்டில் எழுதி வாங்கிவந்து அதனடிப்படையில் மனுவில் குறிப்பிடப்பட்டது. அது கிராம நிர்வாக அலுவலர் கொடுத்ததல்ல என்றாலும், என்னுடைய மைத்துனர் பழனிச்சாமி கொடுத்தது என்றாலும் சரியல்ல. தாவா புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்யும் வரை என் கையில்தான் இருந்தது என்றால் ஆமாம். வழக்கின் அனைத்து வாய்தாக்களுக்கும் என்னுடன் என் மைத்துனர் பழனிச்சாமி வருகிறார் என்றால் சரியல்ல. நான் மட்டும்தான் வருகிறேன். தாவா பிராமிசரி நோட்டை தவிர வேறு பிராமிசரி நோட்டை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா பிராமிசரிநோட்டை மட்டும்தான் பார்த்துள்ளேன். சாட்சிகளை நான்தான் அழைத்து வந்தேன். புரோநோட்டை எழுதிய சந்திரகுமார் என்னுடைய சகலை மகன் என்றால் சரிதான். சாட்சி கையெழுத்து

போட்டுள்ள சந்தோஷ்குமார் எனக்கு உறவு அல்ல. சந்தோஷ்குமார் பழனிச்சாமிக்கு என்ன உறவு என்று எனக்கு தெரியாது. தாவா புரோநோட்டை எழுதியதற்கு பின்னிட்டு சாட்சிகளை எத்தனை முறை சந்தித்திருப்பேன் என்றால் ஒரு முறை, இரண்டு முறை சந்தித்துள்ளேன். சந்திரகுமார் டிகிரி படித்துள்ளார், சந்தோஷ்குமார் என்ன படித்துள்ளார் என்பது எனக்கு தெரியாது. இரண்டு பேருபே திருமணம் ஆனவர்கள். சந்திரகுமார் லேத் வைத்துள்ளார், சந்தோஷ்குமாரும் லேத் வைத்துள்ளதாக சொன்னார்கள். அவர்கள் இருவரும் நண்பர்களாக என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சந்திரகுமார் பழனிச்சாமிக்காக வேறு ஆவணங்கள் எதுவும் எழுதிகொடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சந்திரகுமார் அவருடைய தாய்மாமாவான பழனிச்சாமி வீட்டிற்கு செல்வாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புரோநோட்டு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் எனது வீட்டில் வைத்துதான் எழுதப்பட்டது. புரோநோட்டை யார் வாங்கி வந்தது என்றால் மோகன்ராஜ் கையோடு கொண்டுவந்தார். புரோநோட்டின் எவ்வளவு வட்டி விகிதம் குறிப்பிடப்பட்டது என்றால் 18 சதவீதம் எழுதப்பட்டது. ரூ.100க்கு 1.50 வட்டி விகிதம் ஆகும். இறந்துபோன மோகன்ராஜ் தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை என்றைக்கு என்னிடம் கேட்டார் என்றால் இரண்டு மாதங்களுக்கு முன்பாக கேட்டார், எந்த தேதி, மாதம் என்று குறிப்பிட இயலாது. நேரில் வந்து கேட்டாரா என்றால் போன் மூலமாக வந்து கேட்டாரா என்றால் நேரில் வந்துதான் கேட்டார். அவ்வாறு இரண்டு மாதங்களுக்கு முன்பாக அவர் தெதகை கேட்ட விவரம் சந்திரகுமாருக்கும், சந்தோஷ்குமாருக்கும் தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு

மாதங்களுக்கு முன்பாக மோகன்ராஜ் கடன் கேட்டபோது எந்த ஆவணத்தின் அடிப்படையில் கடன் கொடுப்பதாக பேசப்பட்டது என்றால் பாண்டு அடிப்படையில் கடன் கொடுப்பதாக பேசப்பட்டது. புரோநோட்டு எழுதிய தேதியில் சாட்சிகளின் முன்னிலையில் வட்டி விகிதம் பேசப்பட்டதா என்றால் பேசப்பட்டது. சந்திரகுமார் ஏற்கனவே இதுபோன்ற புரோநோட்டுக்கள் எழுதியுள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றல் தெரியாது. சந்திரகுமாரின் வீடு என்னுடைய வீட்டில் இருந்து அரை பர்லாங் தூரத்திற்குள் உள்ளது. சந்திரகுமாரை நான் மேற்படி தேதியில் என்னுடைய வீட்டிற்கு வர சொல்லவில்லை. என்னுடைய வீட்டிற்கு வரும் வரையில் சந்திரகுமாருக்கு மேற்படி கடன் கொடுப்பது சம்மந்தமான விவரங்கள் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சந்திரகுமார் என்னுடைய வீட்டிற்கு வந்த சமயத்தில் அவரிடம் நான் இதற்கு முன்பாக புரோநோட்டு எதுவும் எழுதியுள்ளாயா என்று விசாரித்தேனா என்றால் இல்லை. காலை சுமார் 9.30 மணி முதல் 10.00க்குள்ளாக வந்தார்கள். ஒரு அரை மணி நேரத்தில் புரோநோட்டு எழுதப்பட்டது. அப்போது என்னுடைய வீட்டில் வேறு யாராவது இருந்தார்களா என்றால் இல்லை, நான் மட்டும்தான் இருந்தேன். அந்த புரோநோட்டில் தமிழ் மாதம், வருடம், தேதி குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது, மார்கழி மாதம் என்று நினைக்கிறேன். மோகன்ராஜ் சொல்ல சொல்ல, சந்திரகுமார் புரோநேட்டை எழுதினார், வேறு யாரும் எந்த விவரம் சொல்லவில்லை, நான் காலண்டர் மட்டும் எடுத்துக்கொடுத்தேன். புரோநோட்டு எழுதப்பட்டதற்கு பின்னிட்டு நான் சரி பார்த்தேன். ஊதா மையினால் புரோநோட்டு எழுதப்பட்டது. மேற்படி புரோநோட்டில்

தொகை எண்ணால், எழுத்தால் எவ்வளவு என்று குறிப்பிடப்பட்டது என்றால் 4 வருடம் ஆகிவிட்டது, புரோநோட்டை பார்த்தால்தான் சொல்ல இயலும். புரோநோட்டின் ஒரே பேனாவில்தான் எழுதப்பட்டு, சாட்சி கையெழுத்து போடப்பட்டதா என்றால் ஆமாம். சந்தோஷ்குமார் சாட்சி கையெழுத்து போட்ட இடத்தில் அவருடைய முகவரியை யார் எழுதியது என்றால் நினைவில் இல்லை. சாட்சி கையெழுத்து போட்ட சந்தோஷ்குமாருக்கு மேற்படி சமயத்தில் திருமணம் ஆகியிருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு நினைவில் இல்லை, அவரை நான் அன்றைக்கு தான் பார்க்கிறேன், அதற்கு முன்பு நான் அவரை பார்த்ததில்லை. மோகன்ராஜ், சந்தோஷ்குமார் இருவரும் சேர்ந்து வந்தார்கள், சந்திரகுமார் பின்னிட்டு வந்தார். சந்திரகுமார் நடந்து வந்தாரா என்றால் நான் வீட்டிற்குள் இருந்தேன், வெளியே அவர் எப்படி வந்து சென்றார் என்று நினைவில் இல்லை. மோகன்ராஜ் புரோநோட்டில் இரண்டு கையெழுத்துக்கள் போட்டார். அது ஒரே பேனாவினால் போடப்பட்டதா என்றால் அது எனக்கு நினைவில் இல்லை. அவர் என்ன கலர் பேனாவால் கையெழுத்து போட்டார் என்று நினைவில் இல்லை. தாவா புரோநோட்டு மோகன்ராஜ் முன்னிலையில் எழுதப்பட்டது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. மோகன்ராஜ் இறந்ததற்கு பின்னிட்டு நான் என்னுடைய மைத்துனர் பழனிச்சாமி, சகலை மகன் சந்திரகுமார் அனைவரும ஒன்றாக சேர்ந்து தாவா புரோநோட்டை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. என்னுடைய வருட வருமானம் ரூ.50,000/- என்று நான் ஒப்புக்கொண்டுள்ள நிலையல் அந்த தொகை என்னுடைய குடும்பம் நடத்துவதற்கு போதாது என்ற நிலையில் ரூ.4,00,000/- நான் மோகன்ராஜ்க்கு கடன் கொடுத்ததாக

சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. என் மகன் மாதம் ரூ.40,000/- சிவில் இன்ஜினியர் மூலமாக சம்பாதித்து வருகிறார், நாங்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்து வருகிறோம். மோகன்ராஜுக்கு நல்ல வருமானம் இருந்த நிலையில் என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் மோகன்ராஜ் இறப்பதற்கு முன்பாக சுமார் 1 வருட காலமாக உடல்நிலை சரியில்லாமல் மருததுவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்ற நிலையில் அதை மறைத்து என்னிடம் வந்து கடன் வாங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மோகன்ராஜின் சொத்தும், என்னுடைய மைத்துனர் பழனிச்சாமியின் சொத்தும் அருகருகே இருக்கும் காரணத்தினால் மோகன்ராஜ் இறந்ததற்கு பின்னிட்டு அவருடைய சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் புரோநோட்டை தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், என் மைத்துனர் பழனிச்சாமியும் ஒரே நாளில் சகலை மகன் சந்திரகுமாரை வைத்துக்கொண்டு அவசர அவசரமாக புரோநோட்டை தயார் செய்து, பிரதிவாதியின் வயோதிகத்தை பயன்படுத்தி பொய்யான இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் தவறானது என்றால் சரியல்ல. இறந்த மோகன்ராஜ் என்னிடம் பணம் கடன் வாங்கியதாக கூறிவிட்டு பிரதிவாதிக்கு எதிராக தனித்து வழக்கு தாக்கல் செய்திருப்பதிலிருந்தே என்னுடைய வழக்கு நிலைக்கததக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.583/2020 பெயர்- சந்திரகுமார் நாள்.11.10.2023

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் B.E(Mech) படித்துள்ளேன். நான் கார் Spare parts வாங்கி கிரைண்டிங் செய்து மீண்டும் கார் கம்பெனிக்கே கொடுக்கும் வேலை செய்கிறேன். அது லேத் வேலை என்றால் இல்லை, சாட்சியம் அளிக்க என்க்கு நீதிமன்றத்திலிருந்து வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்ததின்பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். வாதி சம்பத் எனக்கு சித்தப்பா ஆவார். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை யார் சொன்னது என்றால் வக்கில்தான் சொன்னார். என் சித்தப்பா ஒரு முறை வக்கில் அலுவலகத்திற்கு கூட்டி சென்றார். பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் உள்ள வீடு என் சொந்த வீடுதான். 10 வீடு தள்ளி என் சித்தப்பா சம்பத் வீடு அமைந்துள்ளது. என் சித்தப்பா சும்மாதான் உள்ளார், விவசாயம் நிலம் உள்ளது, வெள்ளாமை உள்ளதா என்றால் தென்னை மரங்கள் உள்ளது. எனது சித்தப்பா கடன் கொடுத்து புரோநோட்டு எழுதி வாக்கும் விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் கடன் கொடுத்த தேதியில்தான் தெரியும். தாவா புரோநோட்டை தவிர வேறு புரோநோட்டு எழுதியுள்ளேனா என்றால் இல்லை, எழுதியதை பார்த்துள்ளேன். என் தாய்மாமா பழனிச்சாமி, நான், என் சித்தப்பா சம்பத் அனைவரும் ஒற்றுமையாகதான் உள்ளோம் என்றால் சரிதான். என் தாய்மாமா

பழனிச்சாமிக்காக நான் எந்தவிதமான புரோநோட்டும் எழுதவிலலை, சாட்சி கையெழுத்தும் போடவில்லை என்றால் சரிதான். மோகன்ராஜ் பழனிச்சாமியிடம கடன் வாங்கியதாக குறிப்பிட்டு வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியுமா என்றால தெரியாது. மோகன்ராஜை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் தாய்மாமா பழனிச்சாமி வீட்டிற்கு அவர் பக்கத்து வீடு என்ற வகையில் பழக்கம். மோகன்ராஜ் என்னிடம் போனில் பேசியுள்ளார் என்றாலும், அவருடைய போன் நெம்பர் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். மோகன்ராஜ் வீட்டில் இரண்டு அக்காக்கள் உள்ளனர். மோகன்ராஜ் எனக்கு நண்பரா என்றால் பழக்க வழக்கம் மட்டுமதான். மோகன்ராஜ் கடன் வாங்கினார் என்பதை தவிர மற்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் அவ்வளவாக தெரியாது- மோகன்ராஜுக்கு எவ்வளவு சொத்துக்கள் எங்கெங்கு இருந்தது, கையிருப்பு எவ்வளவு வைத்திருந்தார் என்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மோகன்ரஜ் இறக்கும்போது அவருக்கு வயது சுமார் 40 இருக்கும். அவருக்கு திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறப்பதற்கு ஒரு வருட காலத்திற்கு முன்பாக அவர் வெவ்வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் என்ன வியாதி வந்து இறந்தார் என்று எனக்கு தெரியாது. மோகன்ராஜின் இறுதி சடங்கிற்கு நான் சென்றேனா என்றால் ஒரு நாள் கழித்து சென்றேன். மோகன்ராஜ் விவசாயம் செய்து வந்தார் என்று எனக்கு தெரியும். ஒரு கடன் கொடுக்கும்போதும் வாங்கும்போதும் என்ன விதமான ஆவணங்கள் எழுதி வாங்கவேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மோகன்ராஜ் கடன்

வாங்குவது குறித்த விவரங்களை எப்போது என்னிடம் சொன்னார் என்றால் இரண்டு நாட்களுக்கு முன்பாக என்னிடம் சொன்னார், போனில்தான் கூறினார். மோகன்ராஜின் போன் நெம்பர் எனக்கு தெரியாது என்றாலும், அவரிடம் பேசியதே இல்லை என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. இரண்டு நாட்களுக்கு முன்பாக மோகன்ராஜ் என்னிடம் பேசியபோது சம்பத்திடம் கடன் கேட்டிருப்பதாக சொன்னார், ஆனால் எவ்வளவு தொகை, எவ்வளவு வட்டி விகிதம் ஆகிய விவரங்களை எல்லாம் சொல்லவில்லை. சம்பத்திடம் கடன் கேட்டிருப்பதாகவும், கூட வருமாறும் என்னிடம் இரண்டு நாட்களுக்கு முன்பாக சொன்னார், அதற்கு பின்னிட்டு என்னிடம் அவர் பேசவில்லை. சம்பத் வீட்டிற்கு வந்ததற்கு பின்னிட்டு மோகன்ராஜ் என்னிடம் கூறினார், அப்போது நான் அங்கு சென்றேன். நான் சென்ற சமயத்தில் அங்கு யார், யார் இருந்தினர் என்றால் மோகன்ராஜ், சாட்சி கையெழுத்து போட வந்த சந்தோஷ்குமார் மற்றும் சம்பத் ஆகியோர் இருந்தனர். சந்தோஷ்குமார் அன்றைக்குதான் எனக்கு தெரியும், அதற்கு முன்பு எனக்கு பழக்கம் இல்லை. சந்தோஷ்குமார், மோகன்ராஜுக்கு நண்பரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சந்தோஷ்குமார், சம்பத்துக்கு உறவினர் இல்லை, எப்படி பழக்கம் என்று எனக்கு தெரியாது. தாவா புரோநோட்டை எழுதியதற்கு பின்னிட்டு சாட்சி சந்தோஷ்குமாரை நான் பார்த்ததில்லை, வாதி சம்பத்தை உறவினர் என்ற வகையில் அடிக்கடி பார்த்துள்ளேன். சந்தோஷ்குமார் Hydralic சம்மந்தமாக வேலை செய்து வருவதாக கேள்விபட்டேன். மேற்படி சந்தோஷ்குமார் ஒரே தொழில் செய்யும் வகையில் நண்பர் என்ற காரணத்தினால்தான் நான் அழைத்ததின்பேரில் சாட்சி கையெழுத்து போட

வந்தார் என்றால் சரியல்ல. நான் வாதி சம்பத் வீட்டிற்கு சென்றபோது காலை 09.30 மணி இருக்கும். மற்ற இருவரும் நான் போகுவதற்கு முன்பாகவே அங்கு இருந்தார்கள் மேறப்டி புரோநோட் சம்பத் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. சம்பத் காலண்டர் எடுத்துகொடுத்ததை பார்த்து நான் எழுதினேனா என்றால் ஆமாம். நான் எழுதிய புரோநோட்டில் தொகை எண்ணால் ஒருமுறை, எழுத்தால் ஒருமுறையும், மேலே ஒருமுறை எண்ணால் எழுதப்பட்டது. ஒரே கலர் பேனாவால் எழுதப்பட்டு, சாட்சிகளாலும், இறந்த மோகன்ராஜாலும் கையெழுத்து செய்யப்பட்டதா என்றால் ஆமாம். புரோநோட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விகித சங்கதிகள் அன்றைக்குதான் எனக்கு தெரியும். புரோநோட்டில் ஒட்டப்பட்ட முத்திரை வில்லை, ஸ்டாம்பு பேடு ஆகியவை யாரால் கொண்டுவரப்பட்டது என்றால் மோகன்ராஜால் கொண்டுவரப்பட்டது. சந்தோஷ்குமாரின் முகவரி விவரங்களை நான் கேட்டு எழுதினேன், கையெழுத்தை அவர் போட்டார். சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து மோகன்ராஜ் முன்னிலையில் மேற்படி புரோநோட்டு எழுதப்படவில்லை என்றால் முற்றிலும் தவறு. புரோநோட்டு எழுதுவதற்கு ஒரு அரை மணி நேரம் ஆயிற்று. தாவா புரோநோட்டை நான், எனது சித்தப்பா சம்பத், சந்தோஷ்குமார் ஆகியோர் சேர்ந்து அவசரகதியில் தயார் செய்த காரணத்தினால் அதுகுறித்து சொல்ல இயலாது என்றால் சரியல்ல. மோகன்ராஜை பற்றியோ, அவருடைய உடல்நிலை பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், என்னுடைய தாய்மாமா பழனிச்சாமி மற்றும் சித்தப்பா சம்பத் ஆகியோர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய சாட்சி சட்டப்படி ஏற்றுக்கொள்ளபடதக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.583/2020 பெயர்- சந்தோஷ்குமார் நாள்.11.10.2023

வா.சா.3 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் DME படித்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் குறிப்டிப்பட்டுள்ள விலாசத்தில் உள்ள வீடு என்னுடைய சொந்த வீடா என்றர்ல ஆமாம். நான் இரும்பு தொழில் செய்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றததிலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளீ என்னால் சொல்லப்பட்டதுதான். சாட்சியம் அளிக்க சம்பத் சொன்னதின் பேரில் வந்தேன். அவர் எனக்கு உறவினர் அல்ல, நண்பர். அவர் 3,4 வருடங்களாக எனக்கு நண்பர். சம்பத்தின் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பத்தின் மைத்துனர் பழனிச்சாமியை தெரியுமா என்றால் தெரியாது. தாவா புரோநோட்டை தவிர வேறு ஆவணங்களில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. தாவா புரோநோட்டை எழுதியதற்கு பின்னிட்டு சம்பத்தை நான் பார்க்கவில்லை. புரோநோட்டு எழுதிய சந்திரகுமார் எனக்கு எவ்வளவு வருடம் பழக்கம் என்றால் புரோநோட்டு எழுதிய அன்றுதான் பார்த்தேன். சந்திரகுமாரும் நான் செய்யும் தொழில்தான் செய்து வருகிறார் என்றர்ல அதுபற்றி எனக்கு தெரியாது. சந்தோஷ்குமாருக்கும், சம்பத்துக்கும் என்ன உறவு என்றால் எனக்கு தெரியாது. 10, 20

நாட்களுக்கு முன்பாக சாட்சி சொல்ல வருமாறு சம்பத் அழைத்தார். மோகன்ராஜை போட்டாவில் பார்த்து என்னால் அடையாளம் காட்ட இயலுமா என்ாறல் இயலும். தாவா புரோநோட்டு எழுதப்பட்ட நாளில்தான் மோகன்ராஜை எனக்கு தெரியுமா என்றால் இல்லை, அதற்கு முன்பாகவே எனக்கு நண்பர். இன்றையிலிருந்து சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பிருந்து பழக்கம். இறந்த மோகன்ராஜின் ஊருக்கும், என்னுடைய ஊருக்கும் இடையே சுமார் 20 கி.மீ தூரம் இருக்கும். என்னுடைய நண்பர் கார்த்தி என்பவரின் மூலமாக மோகன்ராஜ் எனக்கு பழக்கம். மோகன்ராஜ் என்னுடைய நண்பர் என்ற நிலையி அவருடைய சுப துக்கங்கள் எனக்கு தெரியுமா என்றால அவர் சொல்ல மாட்டார். மோகன்ராஜின் குடும்பத்தில் உள்ளவர்கள் எனக்கு யார் யார் என்று தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மோகன்ராஜ் என்ன தொழில் செய்தார் என்று எனக்கு தெரியாது. மோகன்ராஜ் இறக்கும்போது அவருக்கு வயது என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மோகன்ராஜுக்கு திருமணம் ஆகவில்லை. மோகன்ராஜுக்கு எங்கெங்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. மோகன்ராஜ் 2020ல் இறந்தார். தாவா புரோநோட்டு எழுதப்பட்டு 6,7 மாதங்களுக்குள்ளாக அவர் இறந்துவிட்டார். அவர் என்ன காரணத்தினால் இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவருடைய இறுதி சடங்கிற்கு நான் போகவில்லை. மோகன்ராஜ் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக இருந்து, பல்வேறு மருத்துவமனைகளில சிசிக்சை பெற்று வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒரு வருடமாக நான் மோகன்ராஜை பார்த்து கேட்டு அறிந்துகொள்ளவில்லை. ஒரு வருடமாக நான் பார்க்கவே இல்லையா

என்றால் பார்த்தேன், உடல்நிலை பற்றி தெரிந்துகொள்ளவில்லை. மோகன்ராஜ் யார் யாரிடம் கடன் பெற்றார் என்று என்னிட்ம் சொல்லவில்ை. வாதி சம்பத்திடம் கடன் வாங்கபோவதாக மோகன்ராஜ் எப்போது சொன்னார் என்றால் முதல் நாள் மாலைதான் சொன்னார், நேரில் வந்து சொன்னார். தொகை எவ்வளவு கடன் வாங்கபோகவதாக என்னிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை, மூலப்பாளையம் வந்துவிடுவதாக சொனனார். கடன் வாங்ககுவதற்கு என்ன ஆவணங்கள் எழுதப்படபோவதாக முதல் நாள் அவர் என்னிம் சொல்லவில்லை. என்னை சாட்சி கையெழுத்து போடவேண்டும் என்று அழைத்தார். மறுநாள் நான் மூலப்பாளையம் சென்றுவிட்டேன். வாதி வீட்டிற்கு சென்றுவிட்டேனா என்றால் மூலப்பாளையம் பஸ்டாப்பிற்கு சென்றுவிட்டேன். அப்போது சந்திரகுமார் வந்தாரா என்றால் நான் சம்பத் வீட்டிற்கு சென்றதற்கு பின்னிட்டுதான் சந்திரகுமார் வந்தார். நான் 09.30 மணிக்கு சம்பத் வீட்டிற்கு சென்றேன். நான் போனபோது சம்பத் மட்டும்தான் அங்கு இருந்தார். பின்னிட்டு சந்திரகுமார் ஒரு 10 நிமிடங்கள் கழித்து வந்திருப்பார். சம்பத் வீட்டில் யார் யார் இருந்தது என்றால் நான், சந்திரகுமார், மோகன்ராஜ் ஆகியோர் இருந்தோம். கடன் தொகை ரூ.4,00,000/- என்று கூறப்பட்டது, சந்திரகுமார் புரோநோட்டை எழுதினார், அவராக எழுதினார், எதையும் பார்த்து எழுதவில்லை, புரோநோட்டை சந்திரகுமாரே எழுதினார். அந்த புரோநோட்டை நான் பார்த்தேன். புரோநோட்டு எழுதப்பட்டது மோகன்ராஜ் மற்றும் என்னால் கையெழுத்து செய்யப்பட்டது, மற்ற விவரங்கள் எழுதப்பட்டது அனைத்தும் ஒரே பேனா மையினாலா என்றால் ஆமாம். முதலில் மோகன்ராஜ் கையெழுத்து போட்டார், பின்னிட்டு நான் கையெழுத்து போட்டேன்,

அதற்கு பின்னிட்டு சந்திரகுமார் கையெழுத்து போட்டார். என்னுடைய முகவரியை நான்தான் எழுதினேன், சந்திரகுமார் எழுதவில்லை. புரோநோட்டை மோகன்ராஜே கொண்டுவந்தார். அதில் ஒட்டப்பட்ட முத்திரை வில்லை யார் கொடுத்தது என்று எனக்கு தெரியாது. மோகன்ராஜ் கையெழுத்து மட்டும் போட்டாரா என்றால் கைரேகையு் வைத்தார். ஸ்டாம்புபேடு மோகன்ராஜே வைத்திருந்தார். சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் மோகன்ராஜ் முன்னிலையில் தாவா புரோநோட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பத், நான், சந்திரகுமார் அனைவரும் சேர்ந்து இந்த வழக்கிற்காக அவசரகதியில் தாவா புரோநோட்டை உருவாக்கிய காரணத்தினால் அதில் உள்ள சங்கதிகளை தெளிவாக சொல்ல இயலாது என்றால் சரியல்ல. நான் மோகன்ராஜுக்கு நண்பர் அல்ல என்றாலும், மோகன்ராஜை எனக்கு தெரியாது என்றாலும சம்பத் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவ்வாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மோகன்ராஜ் என் முன்னிலையில் தாவா புரோநோட்டில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், அதனால்தான் தாவா புரோநோட்டு குறித்து என்னால் தெளிவாக சொல்ல இயலவில்லை என்றாலும் சரியல்ல. வாதி சம்பத், அவருடைய மைத்துனர் பழனிச்சாமி, வாதியின் சகலை மகன் சந்திரகுமார் மற்றும் நான் அனைவரும் சேர்ந்து மனு சொத்தை அபகரிக்கவேண்டும என்ற எண்ணத்தில் பொய்யான இந்த புரோநோட்டை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என்னுடைய சாட்சி ஏற்றுக்கொள்ளபடதக்கதல்ல என்றாலும் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுளள சங்கதிகள் என்னால்

செல்ல்ப்பட்டவையல்ல என்றாலும், வாதி கேட்டுகொண்டதற்கிணங்க அதில் நான் கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல.